அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 6 (1) விதியின்படி கீழ்க் கண்ட உறுப்பினர்களைப் பேரவையின் மாற்றுத் தலைவர்களாக நான் நியமிக்கிறேன் :—

1. திரு. மா. வே. நாராயணசாமி.
2. திரு. ஏ. ஆர். சுப்பையா.
3. திரு. முனு ஆதி.
4. திரு. ஜே. ஜேம்ஸ்.
5. திரு. ஏ. சுப்பிரமணியம்.
6. திரு. வா. மை. அப்துல் ஜப்பார்.

(முற்பகல் 10-00)

3. நடைமுறைக் கேள்விகள்.

(அ) குடியரசுத் தலைவரால் பிரகடனப்படுத்தப்பட்ட அவசர காலச் சட்டத்தை உறுதிப்படுத்த தீர்மானம் கொண்டுவரப்படுமா என்பது குறித்து.

திரு. க. உரா. எட்மண்ட் : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் இந்தியப் பேரரசினுடைய குடியரசுத் தலைவரால் அவசரகால நிலைமை பிரகடனப் படுத்தப்பட்டு, அவசரகால நிலைமை இன்றையதினம் அமலில் இருந்து வருகிறது. இந்தியத் துணைக்கண்டத்தில் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த சட்டமன்றங்கள், சட்டமன்றக் கூட்ட நடவடிக்கைகளின்போது குடியரசுத் தலைவரால் பிரகடனப் படுத்தப்பட்ட அவசர காலச் சட்டத்தை 'ரேட்டிஃபை' செய்து இன்றையதினம் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டம் நீண்ட இடைவெளிக்குப் பிறகு அவசர காலகட்டத்தில் இப்பொழுது நாம் கூடியிருக்கிறோம்.